பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ.

மலர் : 19] சென்னை : கார்த்திகை 29 (15—12—71) புதன் வெளியூர் : மார்கழி 1 (16—12—71) வியாழன் [இதழ் : 153

எதிரியின் இழப்பு

இதுவரை, கடந்த ஆறு நாள் போரில் பாகிஸ்தானின் இழப்பு வருமாறு :—

விமானங்கள்	83
டாங்கிகள்	175
போர்க் கப்பல்கள்	4
நீர்மூழ்கிகள்	2
பீரங்கிப் படகுகள்	16
இதர படகுகள்	12

இந்தியாவுக்கு ஏற்பட்ட இழப்பு 61 விமானங்கள் — 61 டாங்கிகள் — ஒரு போர்க் கப்பல்.

வங்க தேச அரசு மலர்ந்தது

டாக்காவில் யாகியா ஆட்சி அடியோடு ஒழிந்தது

பாகிஸ்தான் அரசு ஊழியர்கள் வங்கதேசத்துக்கு விசுவாசம் தெரிவித்தனர்

புதுடில்லி, டிச. 15 –

வங்க தேச மக்கள் நெடுநாட்களாக கண்டுவந்த கனவு இன்று நனவாகிறது !

வங்க தேசத்தில், மேற்குப் பாகிஸ்தான் ஆட்சி நிர்வாகம் அடியோடு ஒழிந்தது !

இப்போது வங்க தேசத்தில் அதிகாரபூர்வமாக நடைபெறும் ஒரே அரசு வங்கதேச அரசுதான் !

கிழக்குப் பாகிஸ்தான் கவர்னரும் — அவரது அமைச்சர்களும் — போலீசு தலைமை அதிகாரியும் பதவியை உதறிவிட்டுத் தஞ்சம் புகுந்துவிட்ட நிலையில், கிழக்குப் பாகிஸ்தான் ஆட்சி தலைமையற்றதாகிவிட்டது !

தலைநகரான டாக்காவில் பாகிஸ்தான் அரசுப் பணிமனைகளில் பணியாற்றிவந்த ஏனைய அதிகாரிகள் — ஊழியர்கள் அனைவரும் பாகிஸ்தான அரசிலிருந்து விலகி வங்க தேச அரசுக்கு விசுவாசம் தெரிவித்துள்ளனர் ; அவர்கள் தொடர்ந்து வங்கதேச அரசில் பணியாற்ற முன்வந்திருக்கின்றனர் !

எனவே, 'கிழக்குப் பாகிஸ்தான் அரசு' என்பதாக ஒன்று வங்க தேசத்தில இல்லாது ஒழிந்துவிட்டது ! இப்போது டாக்காவில் நடைபெறும அரசு வங்காள தேச அரசுதான் !

தளபதி நியாசி ஒருவர்தான் இப்போது தன்னைப் பாகிஸ்தானின் பிரதிநிதியாகச் சொல்லிககொண்டிருக்கிறார் ; அவரும், கடைசி ஆள் இருக்கும்வரை இந்தியப் படையை எதிர்த்துப் போராடப்போவதாக அறிவித்திருக்கிறார் ; அவரும் — அவருடைய கடைசி ஆள் வரை உள்ள அனைவரும் போரில் அழிவது உறுதியாகிவிட்டது ! இனிப் பாகிஸ்தான் பெயரைச் சொல்ல ஆள் இல்லை !

இந்தியப் படை டாக்காவின் மையப் பகுதிக்குள் புகுந்துவிட்டதாகவும், இன்று மாலைக்குள் டாக்கா நகரம் முழுதும் இந்தியப் படை வசமாகிவிடும் என்றும் போர்முனைச் செய்தி கூறுகிறது.

இந்தியப் படையுடன் வங்காள தேச விடுதலைப் படையினரும் இணைந்து மிக்க உற்சாகத்துடன் டாக்காவைப் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

சிட்டகாங் துறைமுகம் பற்றி எரிகிறது

விசாகப்பட்டினம், டிச. 15—

இந்தியாவின் தென்பகுதி கடற்படையின் தாக்குதலால் சிட்டகாங் துறைமுகம் எரிந்துகொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியப் படை, காச்லி பசார் துறைமுகத்தையும் இடைவிடாமல் தாக்கி வருகிறது.

ஜெஸ்ஸூர் — கல்கத்தா தொலைபேசி இணைப்பு

புதுடில்லி, டிச. 15—

வங்காள தேசத்தில் இந்தியப் படை வசமாகியுள்ள ஜெஸ்சூரில் தொலைத்பசித் தொடர்பு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டுவிட்டது.

நேற்று கல்கத்தா — ஜெஸ்சூர் இணைப்பு துவக்கிவைக்கப்பட்டது.

போரை நிறுத்தப் புதிய முயற்சி

முஜிபர் ரகிமான் தலைமையில் ஆட்சி அமைக்க வற்புறுத்தல்

சென்னை, டிச. 15—

இந்தியா — பாகிஸ்தான் போரைத் தவிர்க்கப் பிரிட்டனும் — பிரானசும சேர்ந்து ஐ. நா. பாதுகாபபுச் சபையில் ஒரு புதுய தீர்மானத்தைக் கொணடுவர முயன்று வருவதாகத் தொிகிறது.

இதற்கிடையே போலந்து ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறது ; வங்காள தேசததில் மக்களால் தேர்ந்தெடுககபபட்ட பிரதிநிதிகளைக் கொண்டு முஜிபுர் ரகிமான் தலைமையில நிர்வாகததை ஏற்படுத்த வேணடும எனறும, 72 மணி நேரததுக்குள் போரை நிறுததி இரு நாட்டுப் படைகளும விளக்கிக்கொள்ளபபட வேண்டும எனறும, காஷ்மீரிலிருநது பாகிஸ்தான படை திரும்பப் பெறப்பட வேண்டும எனறும அந்தத் தீர்மானததில் கூறப்பட்டிருபபதாகத தெரிகிறது.

அமெரிக்க நிதியுதவி நின்றதன் எதிரொலி

சென்னையில் உள்ள அமெரிக்க நிபுணர்கள் வெளியேறுகின்றனர்

சென்னை, டிச. 15—

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலும் — உர உற்பத்தித் தொழிற்சாலையிலும் பணிபுரியும் சுமார் 33 அதிகாரிகள் அமெரிக்காவுக்குத் திரும்பத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

எஞ்சினீயர்களாகவும் — தொழில் நுட்ப நிபுணர்களாகவும் இவர்கள் பணி புரிந்துவருகின்றனர் ; இவர்கள் வருமான வரி பாக்கி இல்லாததற்கான சான்றிதழ் கோரி மனுச் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு அமெரிக்கா உதவி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது குறித்து, சென்னை வருமான வரி அதிகாரிகள் டில்லிக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

எதிரிக்கு ஆதரவாக எழுதுவதுதான் 'தேச பக்தி'யா?

எழுதுபவர் எத்துணைப் பெரிய மனிதரானாலும் சட்டம் தன் கடமையை ஆற்றத் தயங்காது

இராசகோபாலாச்சாரியார் கட்டுரை பற்றி மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் — முதலமைச்சர் அளித்த பதில்

சென்னை, டிச. 15—

"சென்ற ஆண்டு இதே நேரத்தில், 'இந்தியாவைக் காப்போம்' என்ற குரலுக்குச் சொந்தக்காரராக இருந்த ஒரு பெரியவர், இந்த ஆண்டு இந்த நேரத்தில் — சுயராஜ்யா' ஏட்டில் — ஒரு கருததை எழுதியிருப்பது வேதனை தரக்கூடியது ; 'சுயராஜ்யா' ஏடடில் வெளிவந்த அவரது கருத்து, 'கலகி' ஏட்டிலும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது.

"சமாதான காலத்தில் எந்த ஒரு கருத்தைக் கூறவோ — எந்த ஒரு விமர்சனத்தைச் செய்யவோ எல்லோருக்கும் உரிமை உணடு ; ஆனால், நாடு போரில் ஈடுபட்டு நெருக்கடி நிலை பிரகடனபபடுததபபட்டிருக்குமபோது, எந்த ஒரு கருத்தும் விமரிசனமும் எதிரிக்குப் பயன்படும் வகையில் அரசுககு விரோதமாக வெளியிடப்படுமேயானால், அதனைப பாதுகாப்புச் சட்டம் வேடிககை பார்த்துககொண்டிருப்பது நல்லதல்ல — நாட்டுப் பாதுகாபபுக்கும் உகந்ததல்ல !

"இந்தியாவில் பலவேறு மாநிலங்களில், பத்திரிகை ஆசிரியர்கள் பலர் — 'கரண்ட்' ஆசிரியர் கராக்கா போன்றவர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ; கேரளத்தில்கூட பத்திரிகை ஆசிரியர்கள் கைதாகியுள்ளனர்.

"இதுபோல், எதிரிக்கு இடம் தரும்வகையில், அரசுக்கும் — நாட்டுக்கும் விரோதமாகக் கருத்துக்கள் வெளியிடும நிலைமை வளராவண்ணம் அரசு பார்த்துக்கொள்ளும்"

—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று தமிழகச் சட்டமன்ற மேலவையில் கொண்டுவரப்பட்ட ஓர் ஒததிவைபபுத தீர்மானததுக்குப் பதிலளிததுப் பேசுகையில் உறுதியளித்தார்.

ஆசிரியர் தொகுதியைச் சேர்ந்த சுயேச்சுசை உறுப்பினர் முத்துசாமி, இந்த ஒததிவைப்புத தீர்மானததைக கொணடுவந்தார் ; இநதியத தலைமையைத தாக்கி, 'சுயராஜ்யா' ஆங்கில வார ஏட்டில் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் கட்டுரை எழுதியிருப்பது நாட்டின் பாதுகாப்புககு ஆபத்து உண்டாக்கககூடிய நிலைமையை ஏற்படுத்தியிருப்பதால், அதுபற்றி விவாதிகக வேண்டும்' என்று ஒதத வைபபுத் தீர்மானததில் கூறியிருந்தார்.

தீர்மானத்தின்மீது பேசுகையில் அவர் கூறியதாவது :—

"நாட்டில் நெருககடி நிலைமை இருக்கும் நேரத்தில், ஒவ்வொரு குடிமகனும எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இருககிறது ; ஆனால், மிகப் பெரிய பொறுப்புககளை வகிததவரான இராசகோபாலாச்சாரியார் 11—12—71-ல் 'சுயராஜ்யா' பத்திரிகையில் எழுதியிருககும் கருத்துககள் நாட்டின் பாதுகாப்புககு எதிராகத தூண்டிவிடுவதாக இருககிறது ; இந்திய மக்களின ஒருமித்த உணர்ச்சிககு எதிராகவும இருககிறது.

இராசகோபாலாச்சாரியாரை கைது செய்யவேண்டும — என்று கூறி மாணவர்கள் சுவரொட்டி ஒட்டி இருக்கிறார்கள்.

திடீரென்று இந்தியத் தலைமையை அவர் தாக்கி எழுதியிருக்கிறார் ; நிக்சனின் மறுபிறவிபோல் தம்மை நினைத்துக் கொண்டு, 'யாகியா கான் தான் உண்மையுடன் நடந்து கொள்கிறார்' என்றும் அவர் எழுதியிருக்கிறார்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கின்றவர்கள் எவ்வளவு பெரியவர்களானாலும் — பணக்காரர்களானாலும், தவறு தவறுதான் ; இது பயங்கரமான பிரச்சினையாகும் ; எனவே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்."

கேலி செய்பவர்களைப் பற்றி இந்த அரசு கவலைப்படாது

தமிழ்ச் சான்றோர்களுக்குச் சிலை வைப்பதில் பெருமை கொள்கிறோம்

தஞ்சைக் கோயிலில் நாம் விரும்பியவாறு இராச ராசன் சிலை வைப்பது உறுதி

தமிழக மேலவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, டிச. 14—

"தஞ்சைப் பெரிய கோவிலில் இராசராச சோழனின் திருவுருவச் சிலை நாம் விரும்புகின்ற இடத்தில் வைக்கப் போவது உறுதி"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் கூறினார்.

"தஞ்சைப் பெரியகோவில், மாமல்லபுரம், சங்கைகொண்ட சோழபுரம் போன்ற கோவில்களை நம்மிடத்தில் ஒப்படைத்தால் இன்னும் சிறப்பாக வைத்துக்கொள்ள முடியும்" என்ற கருத்தையும் அவர் அறிவித்தார்.

இராசராச சோழன் சிலையைத் தஞ்சைப் பெரியகோயிலுக்குள் நிறுவ ஆவன செய்யவேண்டி மத்திய அரசை வற்புறுத்துமாறு தமிழகச் சட்டமன்ற மேலவையில் ஜி. சாமிநாதன் (சுத.) கொண்டு வந்த தனிநபர் தீர்மானத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசியதாவது :—

"இராசராச சோழன் சிலையை எப்படி வைப்பது என்பதுதான் பிரச்சினையே தவிர, 'வைப்பது ஏன்' என்ற பிரச்சினை எழவில்லை.

பொதுவாக இந்த அரசு தமிழ்ப் பெரியோர்களுக்கும் --சான்றோர்களுக்கும் விடுதலைக்காகப் பாடுபட்ட பெரியோர்களுக்கும் -- தமிழ் வளர்க்கப் பாடுபட்ட நல்லவர்களுக்கும் -- தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய நல்லவர்களுக்கும் -- அவர்களைக் காலா காலத்துக்கும் மக்கள் நினைவில் வைத்துக்கொள்ளத்தக்க அளவில் சிலை அமைத்து இருக்கிறது; அவர்கள் ஆற்றியுள்ள அரும் தொண்டினையும் தமிழ்ப் பற்று -- வீரம் -- விவேகம் இவைகளையும் எதிர்காலச் சந்ததியினர் இதன்மூலம் அறிந்துகொள்ள முடியும்.

சிலைகள் வைப்பது வேறு சிலரால் கேலிக்கு உரியதாக ஆக்கப்பட்டாலும், அதைப் பொருட்படுத்தாமல் இந்த அரசு பணியாற்றி வருகிறது; அரசே இந்தப் பணியில் நேரிடையாக ஈடுபடாவிட்டாலும், பொதுநோக்கு கொண்டவர்களாலும் -- வள்ளல் தன்மை கொண்டவர்களாலும் இந்தச் சிலைகள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிறுவப்படவேண்டுமென்று அரசு விரும்புகிறது

தமிழனும் -- வீரனும் -- வெளிநாட்டில் தமிழ்க் கொடியைப் பறக்கவிட்ட பெருமைக்கு உரியவனுமான ஆற்றல்மிக்க இராஜராஜ சோழன் சிலையைத் தஞ்சைப் பெரிய கோயிலில் நிறுவுவதற்கு ஒரு குழு உருவாக்கப்பட்டு --அந்தக் குழுவின் யோசனைகளின்படி இராஜராஜ சோழன் சிலையும் உருவாக்கப்பட்டு -- அதை இன்றையத்தினம் மூடி வைத்திருக்கின்ற காட்சி, கொடுமையானதுதான்!

அந்தச் சிலையை வைப்பதில் இரண்டாண்டுக் காலம் தாமதம் ஏற்பட்டதுகூட ஒரு வகையில் நல்லதுதான்; இல்லாவிட்டால் இந்த மாமன்றத்தில் இராஜ ராஜ சோழன் சிலை பெருமைகளைப் பற்றி பேசியிருக்கமாட்டோம் -- பத்திரிகை விமர்சனங்களோடு முடிந்திருக்கும்.

இந்த மாமன்றத்தில் பேசி -- அது மன்றத்தின் நடவடிக்கைப் புத்தகத்தில் அச்சேறி -- மன்ற நூல் நிலையத்தில் இடம் பெறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்காது!

'மாநில அரசின் கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்படுவது நல்லதல்ல' என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினார்; அதற்காகத்தான் நாங்கள் மாநில சுயாட்சி கேட்டு வருகிறோம்.

நெருக்கடி நிலை தீர்ந்து நாங்கள் இந்த மன்றத்தில் தீர்மானம் கொண்டு வருகின்ற நேரத்தில், 'நான்கு கோடி மக்களும் உங்கள் பக்கம் இருக்கிறார்கள்' என்று சொன்ன அதே வார்த்தையை, அவர்கள் (எதிர்க் கட்சித் தலைவர்) அந்த நேரத்திலும் கூறவேண்டும்.

"தஞ்சைப் பெரிய கோயில்— தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் நிர்வாகத்திலிருந்து தமிழக அரசின் நிர்வாகத்திற்கு வரவேண்டும்" என்று கல்வி அமைச்சர் ஒரு கூட்டத்தில் பேசியவுடனே இங்குள்ள சில பத்திரிகைகள் எதிர்ப்புத் தெரிவித்தன--'கூடாது; தி. மு. க. அரசு பூசை நைவேத்தியங்களை நிறுத்திவிடும்' என்று கூறின; இப்போது எங்கக் கோயிலிலும் பூசை நைவேத்தியங்களையும் நிறுத்தவில்லை! ஓடாத தேர் ஓடிக்கொண்டிருக்கிறது!

வர இருக்கின்ற நன்மைகளைக் கூட இங்கிருக்கின்றவர்கள் தடுக்கத் தயாராக இருக்கிறார்கள்!

மத்திய அரசு மறுக்கவில்லை -- மறுக்கிறவர்கள் நம்மிடத்திலேயே பலர் இருக்கிறார்கள்!

"இராஜ ராஜ சோழன் சிலை வைப்பதுதான் மாநில சுயாட்சியா?" என்று எழுதினார்கள்; தமிழர்கள் -- தமிழ் நாட்டிலிருக்கின்றவர்கள் எழுதினார்கள்!

நமக்கு எதிரிகள் நம்மோடு சேர்ந்தே இருக்கிறார்கள்! எதைச் செய்தாலும், 'சோத்தை -- சோடை' என்றுதான் எழுதுவார்களே தவிர, பாராட்டுவதற்கு யாராவது இருக்கிறார்களா என்றால், இல்லை! அந்த அளவுக்குக் குறுகிய மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

இளங்கோ அடிகள் சிலையைக் கடற்கரையில் வைத்தவுடனே-- அதைச் சரியாகக்கூடப் பார்க்காமல், அவர் கையில் வாள் இருக்கிறதே என்பதனாலே, 'வாள், வாள்' என்று எழுதினார்கள்! நம்முடைய துரதிருஷ்டம் -- அந்தப் பத்திரிகை அமெரிக்காவுக்கும் செல்கிறது! வாள் கையில் இல்லை -- கீழே இருக்கிறது!

நான் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, அங்குள்ள தமிழர்கள் இதைப் பற்றி என்னிடம் கேட்டார்கள்; நான் நிலைமையை விளக்கிச் சொன்னேன்.

அரசைத் தாக்கவேண்டும் என்ற எண்ணத்தில், படத்தைப் பார்த்துவிட்டுச் சிலையைப் பார்க்காமல் எழுதுகிறார்கள்; முதலில் அந்த மனமயக்கத்திலிருந்து விடுபட வேண்டும். பல்வேறு கோணத்திலிருந்து எடுக்கப்பட்டிருப்பதால், கையிலே வாள் இருப்பதுபோல தெரிகிறது; யாராவது நிருபர்களை அனுப்பிச் சிலையைப் பார்த்துவிட்டு எழுதியிருக்கக்கூடாதா?

இத்தாலி -- ரோமாபுரியில் திரும்பிய இடங்களிலெல்லாம் சிலைகள் காட்சி அளிக்கின்றன.

அமெரிக்காவில், வாஷிங்டனில் நினைவுத் தூண் நிறுவப்பட்டிருக்கிறது; அதற்குப் பின்னால் ஆபிரகாம்லிங்கனின் சிலை -- அதற்குப் பின்னால் கென்னடியின் கல்லறை அமைந்திருக்கிறது.

இங்குள்ள குதர்க்கவாதிகளைப் போல் அங்கு எவரும் இல்லை.

இங்கிலாந்திலேயும் அப்படித் தான் சிலைகள் இருக்கின்றன!

சிலை செய்துவைப்பது ஒன்றும் அதிசயம் அல்ல -- இங்கேதான் கேலிக்குரிய ஒன்றாகிவிட்டது!

கட்சி சார்பற்ற முறையில் வ. உ. சிதம்பரனாருக்குத் சிலை அமைத்திருக்கிறோம்; பாரதியாருக்குச் சிலை அமைத்திருக்கிறோம்; தமிழ் படித்த மேல்நாட்டு அறிஞர்களுக்குச் சிலை வைத்திருக்கிறோம்.

அந்த வகையில், இராஜராஜ சோழனுக்கு சிலை வைப்பது உணர்ச்சிமயமான காரியமாகும்.

துவாரபாலகர்களைப்போல் இன்றைக்கு இராசராச சோழனின் சிலை கொட்டகையில் மூடி வைக்கப்பட்டிருக்கின்ற காட்சியைக் கண்டு தமிழ்ப் பற்று உள்ளவர்கள் மனம் உருகாமல் இருக்க முடியாது!

அண்மையில் நான் தஞ்சாவூருக்கு மத்திய அரசு அதிகாரிகளை அழைத்துச் சென்று, 'எந்த இடத்தில் சிலை நிறுவலாம்' என்பதுபற்றிப் பரிசீலித்து, 'குறவஞ்சி மேடையில் நிறுவலாம்' என்று முடிவு செய்து -- புகைப் படத்தோடு தலைமை அமைச்சரிடத்தில் காட்டி நிலைமையை விளக்கியிருக்கிறேன்; நாளைக்கே உத்தரவிடுவதாக தொடர்புள்ள துறைக்கு அனுப்பிவைத்தார்கள்; 'நாளைக்கு' என்பது, 'இன்றைக்கு ரொக்கம் -- நாளைக்குக் கடன்' என்பதுபோல் ஆகிவிட்டது!

தஞ்சைப் பெரிய கோயில் -- மாமல்லபுரம் — சங்கைகொண்ட சோழபுரம் போன்ற கோயில்களை நம்மிடத்தில் ஒப்படைத்தால் இன்னும் சிறப்பாக நம்மால் வைத்திருக்க முடியும்; அவைகளை இந்த அரசிடம் ஒப்படைத்தால் இந்திய ஒருமைப்பாடு கெட்டுவிடாது -- ஆபத்து வந்துவிடாது!

மதுரையில் திருமலை நாயக்கரின் சிலை நிறுவப்பட்டிருக்கிறது; அதுவும் (அம்பிகை இருக்கின்ற) கர்ப்பக் கிருகத்துக்கு அருகில் இருக்கிறது.

மதுரைக் கோயிலைக்கூட, முழுவதும் அவர் கட்டியதாகச் சரித்திரபூர்வமான ஆதாரம் இல்லை; திருப்பணி செய்ததாகத்தான் கூறப்பட்டிருக்கிறது.

திருப்பணி செய்தவருக்கே சிலை வைக்கப்பட்டிருக்கும்போது, பெரியகோயில் முழுவதையும் கட்டிய இராஜராஜ சோழனுக்கு ஏன் உள்ளே சிலை வைக்கக் கூடாது?

சேதுபதிக்கு இராமேசுவரத்தில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது; ஆனால், இன்றைக்குத் தஞ்சையில் சிலை வைக்கத் தடை இருக்கிறது.

ஒரு மாநிலத்தின் உரிமை எந்த அளவுக்கு மறுக்கப்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஒரு மாநிலம் கேட்டு -- உடனே தலை அசைத்து விட்டால், மத்திய அரசின் கௌரவம் என்ன ஆவது? செய்யவேண்டிய தாமதம் செய்தால்தான் 'மத்திய அரசு' என்பதற்குப் பொருள் போலும்!

இந்தத் தீர்மானத்தின் உணர்ச்சிப்பூர்வமான கருத்துக்களை இந்த அரசு மதிக்கிறது; ஆனால் இந்த நேரத்தில், மத்திய அரசை எதிர்ப்பதுபோல ஒரு தீர்மானம் போடவேண்டாம்.

இராச ராச சோழன் சிலை வைக்கப்போவது உறுதி -- அதுவும், நாம் நினைக்கின்ற இடத்தில் வைப்போம்!"

'போனஸ் சட்டத் திருத்தப் போராட்டம்'--முதல் கட்டம்

நவ. 14-ல் நாடெங்கும் ஊர்வலம் -- பொதுக்கூட்டங்கள் நடைபெற்ற விவரம்

சென்னை, நவ. 30—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை சார்பில், 'போனஸ் சட்டத் திருத்தப் போராட்ட' முதல் கட்டப் பொதுக் கூட்டம், சென்னையில் 14-11-71-ல் நேப்பியர் பூங்காவில், சிப்சங் சங்கத் துணைச்செயலாளர் திரு. ந. கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

திரு. மணிமாறன், வெ. கண்ணன், நடராசன், அ. புகழேந்தி, முரசொலி அடியார், மேயர் சா. கணேசன், வி. எஸ். கோவிந்தராசன், செ. கந்தப்பன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

இறுதியில், பேரவைப் பொதுச் செயலாளர் காட்டூர் கோபால் எம்.எல்.சி. அவர்கள் பேசியபின், கீழ்க்கண்ட இரண்டு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு -- மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது :—

1. தொழிலாளர்களுக்குப் போனசாகக் குறைந்தபட்சம் அவரது மொத்தச் சம்பளத்தில் 4-சதவிகிதம் என்று இருப்பதை 81/3 சதவிகிதமாக உயர்த்தப்படுவதற்கான வகையிலும், உயர்ந்தபட்சம் 20 சதவிகிதம் என்ற எல்லையை எடுத்துவிடும் வகையிலும் சட்டத் திருத்தம் செய்வதற்கு மத்திய அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்வது.

2. இந்தக் கோரிக்கைகளுக்காக இனிமேல் குழுக்கள் போடுவது -- முத்தரப்பு மாநாடுகள் கூடுவது என்கின்ற வகையில் காலந்தாழ்த்தாமல் நடப்பு பாராளுமன்ற கூட்டத்திலேயே இந்தச் சட்டத்திற்கு வழி செய்தாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

தர்மபுரி

கிருட்டிணகிரி நகர தி. மு. க. சார்பில் காரனேஷன் கிளப் கட்டடத்தில் கிருட்டிணகிரி நகராட்சித் தலைவர் திரு. பி. திம்மராயன் தலைமையில் ஊர்வலம் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் திருவாளர்கள் எம்.கமலநாதன் எம்.பி., ஏ. எம். இராசா எம்.ஏ., எம்.எல்.ஏ., சி. மன்னியப்பன் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் அலிப்கான், மற்றும் பலர் பேசினர். கூட்ட இறுதியில் போனஸ் சட்டத்தினை திருத்தக்கோருகிற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆரணி

வட ஆற்காடு மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் ஆரணியில் திரு. எம். பெருமாள் எம்.சி., தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திரு. ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ., நகரமன்றத் தலைவர் எத்துராசு, துணைத் தலைவர் இராச மாணிக்கம், வட்டச் செயலாளர் இராமன், நகரச் செயலாளர் ஏ செல்வராசு மற்றும் பலர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன.

திண்டுக்கல்

திண்டுக்கல் நகர முன்னேற்றத் தொழிற் சங்கப் பேரவை சார்பில் திண்டுக்கல் பாரதி திடலில் திரு பொன். சீனிவாசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கோவை பாலு, நெல்லை திராவிடமணி, கலியரத்தினம் பி.ஏ. பி.எல்., சம்பந்தம் பி.ஏ.பி.எல்., மற்றும் பலர் பேசினர்.

அன்று மாலை 4-மணிக்கு குமரன் பூங்காவிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு பாரதி திடலை அடைந்தது.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

திருவில்லிபுத்தூர்

திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் திருவில்லிபுத்தூரில் ஊர்வலம் — பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் சுருளிவேலு பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., நகரமன்றத் தலைவர் இராதாகிருட்டிணன் பி.ஏ.பி.எல்., துணைத் தலைவர் ஆறுமுகம் பி.காம்., ஆர். கே. துரை, ஆர். நாரணன் ஆகியோர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

சேலம்

சேலத்தில் போனஸ் சட்டத் திருத்தப் போராட்டப் பொதுக் கூட்டம் நடைபெற்றது; திரு. பி. கோவிந்தசாமி எம்.சி. தலைமை வகித்தார்.

பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்களும், மற்றும் கே. செயராமன் எம்.எல்.ஏ., நகராட்சித் தலைவர் பழனியப்பன், எச். ஆர். விசயன், டி. கே. பொன்னுவேலு, சுபாசு, ஆர். வி. சுப்பராயன், தண்டபாணி ஆகியோர் உரையாற்றினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

திருப்பூர்

கோவை மாவட்டம் திருப்பூர் நகரில் கோவை மாவட்டப் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் பி. பெரியசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது; கழகப் பொதுக் குழு உறுப்பினர் தா. வி. அன்புக்கண்ணன், பி. ஏ. முருகேசன், பெரியசாமி ஆகியோர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

குடந்தை

கும்பகோணத்தில் புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டுச் சாரங்கபாணிகோயில் சன்னதியை அடைந்தது; மாலை 6-மணியளவில் திரு. சாமிநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; கூட்டத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பேரவைத் தலைவர் பா. மாணிக்கவாசகம் பி.ஏ.பி.எல்., மற்றும் கோ. வெங்கடாசலம், ப. கோவிந்தசாமி, சந்திரசேகரன், ரெங்கராசன் எம்.சி., கோ. நடராசன், ரெங்காச்சாரி, கலையரசன், மருதமுத்து, கிருட்டினமூர்த்தி, சௌந்தரராசன் ஆகியோர் உரையாற்றினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

அருப்புக்கோட்டை

அருப்புக்கோட்டை நகரசுத்தித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் திரு. ஆ. குருசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது.

இரவு 7.30 மணியளவில் காந்தி மைதானத்தில் திரு. ஆ. குருசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; திரு. பெ. பெ. நல்லதம்பி, ஆ. குருசாமி ஆகியோர் பேசினர்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன.

கோவை

கோவை நகர அவனாசி சாலையில் அண்ணா சிலைக்கு மாலைகள் அணிவித்துவிட்டு -- பேரவைச் செயற்குழு உறுப்பினர் பி. கருப்பசாமி, கி. அரங்கநாதன் எம்.எல்.ஏ., காட்டூர் தேவராசு, அய்யாசாமி, மின்கழகக் கணக்காயர் சங்கச் செயலாளர் இரா. வெள்ளிங்கிரி ஆகியோர் முன்னே செல்ல -- சுமார் 5,000 பேர் கொண்ட மாபெரும் ஊர்வலம் கோவை நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று பாப்பநாய்க்கன்பாளையம் பாரதிதாசன் திடலை அடைந்தது.

இரவு 7-மணியளவில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; கூட்டத்தில் கோ. சி. மணி எம்.எல்.சி., சென்னை நீலமேகம் பி.ஏ.பி.எல்., இரா. வெள்ளிங்கிரி, சி. இராசன் மற்றும் பலர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டது.

தாராபுரம்

திருப்பூர் தாராபுரம் ரோடிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு நகர் மன்றத் திடலை அடைந்தது.

இரவு 8-மணியளவில் கூட்டம் நடைபெற்றது; தா. வி. அன்புக்கண்ணன், பி. ஏ. அரங்கநாயகம் எம்.ஏ., பி.டி.பி.எல்., சு. துரைசாமி எம்.எல்.ஏ., நா. கந்தசாமி பி.ஏ.பி.எல். மற்றும் பலர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடலூர்

மாலை 4-30 மணியளவில் ஊர்வலம் புறப்பட்டு பொதுக்கூடத் திடலை அடைந்தது.

கூட்டத்தில் என். இராசாங்கம் எம்.எல்.ஏ., புதுவை செ. முத்து எம்.எல்.ஏ., கே. சி. மூர்த்தி, பழனிவேலு ஆகியோர் உரையாற்றினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன.

காரமடை

காரமடையில் போனஸ் சட்டத் திருத்தப் போராட்டப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மே. சு. தூயமணி எம்.எல்.ஏ., தங்கவேலு பி.ஏ. பி.எல்., காட்டூர் தேவராசு, மணியன், சின்னசாமி மற்றும் பலர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன.

பெரிய நாய்க்கன்பாளையம்

பொதுக்கூட்டம், பயனீர் மில் தேவராசன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் உடுமலை குழந்தைவேல் பி.ஏ.பி.எல்., தி. மு. கழக வட்டச் செயலாளர் தெ. கு. மெய்யப்பன், காட்டூர் தேவராசு, முத்து, தர்மலிங்கம் மற்றும் பலர் பேசினர்.

கூட்ட முடிவில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

உடுமலைப்பேட்டை

உடுமலை வட்ட தி. மு. க. சார்பில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் உடுமலை வட்ட தி. மு. கழகச் செயலாளர் க. பருவதக்கண்ணன், மற்றும் கோவிந்த

(6-ம் பத்தி பார்க்க)

(8-ம் பத்தித் தொடர்ச்சி)

சாமி, மயில்சாமி, மணி ஆகியோர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

பேட்டை (நெல்லை)

பேட்டையில் திருமலை ஆலை தொ. மு. சங்கம், தச்சு -- கருமார் தொ. மு. சங்கம் ஆகியவற்றின் சார்பில் ஊர்வலம் -- பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அழகியநம்பி பி.ஏ. பி.எல்., புகாரி எம்.சி., கவுஸ் முகமது சங்கரன் ஆகியோர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்கோதையாறு

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் மேற்கோதையாறு கிளைச் சார்பில் மாலை 3-மணியளவில், அண்ணா திடலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு சங்கப் பணிமனையில் முடிவுற்றது.

கூட்டத்தில் பேரவைப் பொதுக் குழு உறுப்பினர் ச. ம. வினைதீர்த்தான், இராமசாமி, ஜோசப் ஆகியோர் உரையாற்றினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

கடலூர்

கடலூர் துறைமுகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் நகரச் செயலாளர் கி. கோவிந்தராசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கி. தண்டபாணி எம்.சி., வி தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

தர்மபுரி

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் -- தமிழ்நாடு சழகக் கணக்காயர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கழகப் பொதுக்குழு உறுப்பினர் சிற்றுளி சுப்பிரமணியம், தர்மபுரி மாவட்டச் செயலாளர் எச். எல். முருகேசன், நகர் மன்றத் தலைவர் த. வே. வடிவேலன், மற்றும் பலர் பேசினர்.

கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டன.

ஆரல்வாய்மொழி (குமரி)

வள்ளுவர் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைச் செயலாளர் எம். மசூத்தான் எம்.சி., ஆ. சுந்தரம், சோமசுந்தரம், மற்றும் பலர் பேசினர்.

இராசபாளையம்

திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் ஊர்வலம்—பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் ஏ. பி. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நெல்லை நெடுமாறன், இராசபாளையம் நகர் தி.மு. கழகச் செயலாளர் மு. வ. கந்தசாமி எம்.சி., கணக்காயர் சங்கப் பிரதிநிதி முருகேசன், மின்சாரத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பிரதிநிதி திருவேங்கடம், சங்கத் துணைத் தலைவர் சங்கரலிங்கம் ஆகியோர் பேசினர்.

பிராட்வே பேருந்து நிலையம்

மாற்றியமைக்கும் திட்டம் ஆய்வு

சென்னை, டிச. 14—

"சென்னை -- பிராட்வே பகுதியில் உள்ள வெளியூர் பஸ் நிலையத்தை வசதிகளுடன் புதுப்பித்துக் கட்டுவதற்காக ரூ. 13 95 000 செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது; இதைத் தலைமைப் பொறியர் பரிசீலித்துவருகிறார்.

"இத்திட்ட நிறைவேற்றத்திற்காக மாநில அரசிடம் சென்னை மாநகராட்சி ரூ. 6-இலட்சம் கடன் கோரியிருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், கல்வி -- உள்ளாட்சித் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

லும் பகுதிகளில் மேம்பாடு செய்வது குறித்து ஆலோசனை கூறுவதற்காக ஒரு குழு மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ளது; இந்தக் குழுவின் அறிக்கை 6 திங்கள் காலத்திற்குள் கிடைக்கும்"

என்று சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்

மீன் ஏற்றுமதி

"தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2,49,00,000 மதிப் மீன் வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது; இதனைத் தனியார்களே ஏற்றுமதி செய்கின்றனர்"

என்று சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் கூறினார்.

செம்புச் சுரங்கம்

"மாமண்டூரில் கிடைக்கும் தாமிரம் பொருளாதார ரீதியில் எடுத்து பயன்படுத்தக்கூடியதா என்பது ஆராயப்படுகிறது"

என்று சட்டப் பேரவையில், ஆர். ஆர். முனுசாமி (தி. மு. க.) கேள்விக்குப் பதிலளிக்கையில் தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள் கூறினார்.

இசைக் கருவிகள் ஏற்றுமதி

"தஞ்சை மாவட்டத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ரூ 38,000 மதிப்புள்ள இசைக் கருவிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் தெரிவித்தார்.

கோக்கோ சாகுபடி

"மதுரை, குமரி மாவட்டங்களில் மொத்தம் 3,000 ஏக்கர் நிலத்தில் கோக்கோ பயிர் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

பக்கிங்காம் கால்வாய்

"பக்கிங்காம் கால்வாய் செல்

தமிழ் நாட்டில் துணைக் கிணறுகள்

இரஷ்யாவிலிருந்து இயந்திரம்

சென்னை, டிச. 14—

"தமிழ்நாட்டில் துணைக் கிணறுகள் தோண்டுவதற்கான இயந்திரங்கள் இரஷ்யாவிலிருந்து ரூ. 1 கோடி மதிப்பில் தருவிக்கப்படும்; உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் ரூ 60 இலட்சம் மதிப்பில் 13 வாங்கப்படும்"

என்று சட்டப் பேரவையில் தகவல் தரப்பட்டது.

1,56,000குழந்தைகட்குச் சத்துணவு

கிராமப்புற வேலைவாய்ப்புக்கு ரூ. 2.95 கோடி

தமிழ்நாடு துணை மானியக் கோரிக்கை -- முதல்வர் விளக்கம்

சென்னை, டிச 14—

1971—72-ம் ஆண்டுக்கான முதல் துணை மானிக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை முதலமைச்சர் கலைஞர், சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார்; அதன்மீது அவர் பேசுபோது குறிப்பிட்டதாவது:—

"கிராமப்புற வேலை வாய்ப்புக்கான திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை, நமது மாநிலத்தின் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையையும் -- மக்கள் தொகையையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது மிகக் குறைவாக இருந்தது; எனவே, இந்தத் திட்டத்தை ஆண்டுதோறும் ரூ 295 இலட்சம் தொடர் செலவில் நிறைவேற்றுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சிப் பகுதியிலும், கோவை--மதுரை--திருச்சி நகராட்சிகளிலும் ஓர் இலட்சத்திற்குமேல் மக்கள் தொகை கொண்ட 17 நகரங்களிலும், குடிசைப் பகுதிகளில் 3-வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு அளிக்கும் திட்டம் ரூ. 66 இலட்சம் தொடர்ச் செலவில் நிறைவேற்றப்பட்டுவருகிறது.

ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 1,56,000 குழந்தைகள் பயன் அடைகிறார்கள்.

இளைஞர் அணிக்காக ஆண்டுதோறும் ரூ 36 80 இலட்சம் செலவழிக்க அரசு அனுமதித்துள்ளது.

தமிழ்நாடு சைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) பங்கு மூலதனத்திற்கு மேற்கொண்டு ரூ. 20 இலட்சம் வழங்கியதற்கும் இந்தத் துணை மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் நிறுவப்பட்டு வரும் உரத் தொழிற்சாலைக்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்குக் கூடுதலாக ரூ. 80 இலட்சம் நிதி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

எல்லா நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவது என்ற நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ள குடிநீர் வழங்கு -- கழிவு நீரகற்று வாரியத்துக்கு நடைமுதல் மூலதனக் கடனாக ரூ 2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவல் துறை ஆணைக் குழு செய்த சிபாரிசுகள் சிலவற்றை ஏற்றுக் காவல் படையை புதுமைப்படுத்தி மாற்றியமைக்க ரூ 40.63 இலட்சம் செலவிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது."

மருந்துகளின் விலை

'உயராது' என உறுதி

சென்னை, டிச. 14—

நாடு நெருக்கடி நிலையில் இருக்கும் இந்த நேரத்தில் மருந்துகளின் விலை ஏறுமலிருக்க, அரசுடன் முழு ஒத்துழைப்பு அளிப்பதாக மருந்து வியாபாரிகள் சங்கம் உறுதியளித்திருக்கிறது.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் விளக்கம்

சென்னை, டிச. 14—

"தமிழ்நாட்டில் சுமார் 60 000 பிச்சைக்காரர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது"

என்று, சட்டப் பேரவையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் தெரிவித்தார்.

ஜோதி அம்மாள் (சிண்டிகேட்) :— "பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு நிலையம் மதுரையிலும் ஏற்படுத்தப்படுமா?"

முதல்வர் :— "மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பிச்சைக்கார மறுவாழ்வு நிலையங்களை ஒருங்கிணைத்து நடத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது; தமிழ்நாட்டில் 6 இடங்களில் பெரிய நிலையங்கள் சட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது; அவற்றில் மூன்று நிலையங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன."

மதுரையில் வானொலி நிலையம்

மற்றும் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும்--அவற்றுக்கு அமைச்சர்கள் அளித்த பதில்களும் வருமாறு :—

கிட்டப்பா (தி. மு. க):—"மதுரை நகரம் இரண்டாவது மாநகராட்சியாக ஆகிவிட்டதால், அதை சுட்டிக்காட்டியாவது அங்கு ஒரு வானொலி நிலையம் வைக்கும்படி மத்திய அரசிடம் வற்புறுத்தப்படுமா?"

முதல்வர் :— "ஏற்கனவே பல முறை வற்புறுத்தியிருக்கிறோம்; இந்தப் புதிய கருத்தின் அடிப்படையிலும் மீண்டும் மத்திய அரசுக்கு வலியுறுத்தி எழுதப்படும்."

அரசு அலுவலகங்களில் வேலை நாட்கள்

பி. எஸ். மணியன் (தி.மு.க):— "வாரத்திற்கு 5 நாட்கள் மட்டும் வேலை செய்யும் நாட்களாக அரசாங்க அலுவலகங்களில் ஏற்படுத்தும் திட்டம் உண்டா?"

முதல்வர் :—"இல்லை."

பி. எஸ். மணியன் (தி.மு.க.) :— "வெளிநாட்டில் எல்லாம் அரசாங்க வேலைகள் காலையில் 8 மணிமுதல் மாலை 2 மணிவரை நடக்கிறது; அந்தத் திட்டம் இங்கும் கையாளப்படுமா?"

முதல்வர் :— "அப்படி மாற்றும் திட்டத்தை அவர்கள் எளிதில் ஒத்துக்கொள்வதாக இல்லை."

துரைசாமி (தி.மு.க):— "அவசர நிலைமை காரணமாக மத்திய அரசு அலுவலகங்களில் இரண்டாவது சனிக்கிழமையும் வேலை செய்கிறார்களே -- அந்தத் திட்டம் இங்கும் கொண்டுவரப்படுமா?"

முதல்வர் :— "இப்போதே அரை மணி நேரம் அதிகம் வேலை செய்யத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்."

நடைபாதை கடைகள்-- மாற்று இடம் தர ஏற்பாடு

லத்தீப் (முஸ்லிம் லீக்):—'சென்னை நகர முக்கியமான நடைபாதைகளில் கடைகள் வைத்திருப்பவர்கள், மலேயா -- பர்மா போன்ற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்; ஆகவே, அந்தக் கடைகளை அகற்றும் போது அவர்களுக்கெல்லாம் மாற்று இடம் கொடுக்கப்படுமா?"

முதல்வர் :— "பர்மா -- மலேயா அகதிகள் வருவதற்கு முன்பும் பலர் நடைபாதைகளில் கடை வைத்திருந்தார்கள்; இப்போது இந்த நடைபாதைக் கடை வைத்திருந்தவர்களுக்குப் பல இடங்களில் மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளது; மேலும் தருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன."

நடைபாதை கோவில்

ஆர். ஆர். முனுசாமி (தி.மு.க.):— "நடைபாதைகளில் பல இடங்களில் கோவில்கள் கட்டப்பட்டிருப்பதால் அவைகள் போக்குவரத்துக்கு "இடைஞ்சலாக இருப்பதால் அவைகள் தடுக்கப்படுமா?"

முதல்வர் :— "அப்படிப்பட்ட கோவில்களில், பக்திபூர்வமாக வைக்கப்பட்டவை அனுமதிக்கப்படும்; வியாபார நோக்கத்துடன் வைக்கப்பட்டிருக்கும் கோவில்கள் அனுமதிக்கப்பட மாட்டாது."

மஞ்சள்நதி பூச்சன் ஓடைத் திட்டம்

நாவலர் நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டினர்

மதுரை மாவட்டம்—காமாட்சிபுரத்தில் பச்சையப்பா பாண்டியனார் திடலில், 1—12—71 அன்று மஞ்சள் நதி பூச்சன் ஓடைத் திட்டம் ரூ. 8 இலட்சம் செலவில்—665 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதற்கு—அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

திரு. பி. டி. ஆர். பழனிவேல் இராசன் எம்.எல்.ஏ. தலைமையில் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அடிக்கல் நாட்டினர்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இலட்சுமிகாந்தன் பாரதி, பள்ளி மாணவர் 300 பேருக்குச் சீருடை வழங்கினர்.

உத்தமபாளையம் வட்டச் செயலாளர் பி. எஸ். செல்லத்துரை, நடிகமணி டி. வி நாராயணசாமி எம.எல்.சி., வெ. இரத்தினம், எம். கே. வீரசின்னு ஆகியோர் பேசினர்.

திரு. ஐ இரத்தினம் அனைவரையும் வரவேற்றார்; திரு. வெ. மாடசாமி பொன்னுடை போர்த்தினர்; திரு. எஸ். பாலகுருசாமி நன்றி நவின்றார்.

திரைப் பட நடிகர்கட்கு ஊதிய வரம்பு

சட்டப் பேரவைக் கேள்வி -- முதல்வர் விளக்கம்

சென்னை, டிச. 14—

"திரைப்பட நடிகர்களின் ஊதியத்தை சட்டுப்படுத்தும் திட்டம் உண்டா?"

என்று சட்டப் பேரவையில் மாயவரம் என். கிட்டப்பா (தி. மு. க.) கேட்டார்.

முதலமைச்சர் :—"நடிகர்களின் வருமானத்திற்கு மேல் வரம்பு விதிக்க இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை."

"சில நடிகர்களின் வருமான வரி பாக்கி குறித்துப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தவிர மாநில அரசுக்குத் தகவல் ஏதுமில்லை"

என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முதல்வர் தெரிவித்தார்.

ஜேம்ஸ் (சிண்டிகேட்) :—"ஒரு நடிகர் ஒரே நேரத்தில் இத்தனை படங்களில்தான் நடிக்கலாம் என்று வரம்பு கட்டப்படுமா?"

முதல்வர் :—"கலைக்குக் கட்டுப்பாடு விதிக்க முடியாது; படத் தயாரிப்பாளர்கள் இதுபோன்ற ஒரு முறை முயன்று நடைமுறைக்கு வரமுடியவில்லை."

யாகியாகான் ஆட்சிப் பகுதியின்...

கவர்னர்-அமைச்சர்கள்--ஐ. ஜி. உட்படப் பலரும் பதவியைவிட்டு ஓட்டம்

நடுநிலைப் பகுதியில் தஞ்சம்புகுவோர் பட்டியல் நீள்கிறது

டாக்கா நகருக்குள் இந்தியப் படை--பாகிஸ்தான் தளபதியின் பரிதாப நிலை

டாக்கா, டிச. 15—

மேற்கும் பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்கு வங்கதேசத்தைக் கை கழுவும் இறுதி நேரம் மிக வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது; இந்தியப் படைகளின் தாக்குதலை இனி தாங்கிக்கொள்ள முடியாது என்று தெரிந்துகொண்ட யாகியா கானின் 'பொம்மை' கவர்னர் ஏ. எம். மாலிக்கும் -- அரசும் -- அதன் உயர்தர அதிகாரிகளும் ஒட்டுமொத்தமாக இராஜினாமா செய்து 'நடுநிலை'ப் பகுதியில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

நமது அமைச்சரவையின் இராஜினாமாவை -- நடுங்கும் கைகளுடன் -- துண்டுக் காகிதம் ஒன்றில் எழுதி -- அமைச்சர்கள் குழு சூழ்ந்திருக்க -- ஐ. நா. அதிகாரி ஒருவரிடமும், 'சண்டே அப்சர்வர்' என்ற பத்திரிகையின் நிருபரிடமும் அவர் காட்டியதாகக் கூறப்படுகிறது.

தமது இராஜினாமாவை எழுதும்போது, அவரது மாளிகையின்மேல் இந்திய விமானங்கள் குண்டுமாரி பொழிந்துகொண்டிருந்தன.

என்ன முடிவு எடுப்பது என்பதில் நேற்று காலை முழுவதும் ஏ. எம். மாலிக் குழம்பிக்கொண்டிருந்தாராம்; ஆனால், குண்டு முழக்கங்களைக் கேட்கக் கேட்க அவர், 'இராஜினாமா செய்வது' என்ற முடிவுக்கு வந்துவிட்டார்; அதன்பிறகு அவர் தொழுகையை முடித்துக்கொண்டு ஐ. நா. அதிகாரியிடம், 'நடுநிலைப் பகுதிக்கும் போகலாமா?' என்று கேட்டார்.

இன்டர் காண்டினென்டல் ஓட்டல், நடுநிலைப் பகுதி -- என்று அறிவிக்கப்பட்டுள்ளது; வெளிநாட்டுக் குடியினரோ வேறு யாருமோ இங்கு தஞ்சம் புகலாம் என்றும், இந்த ஓட்டல் தாக்கப்பட மாட்டாது என்றும் இந்தியத் தரப்பில் உறுதி கூறப்பட்டிருந்தது; நமது இராணுவம் இப்பகுதியைத் தாக்குவதில்லை.

இதற்கு முன்பாகவே, மாநிலப் போலீசு ஐ. ஜி. உட்பட 16 உயர்தர அதிகாரிகள் அங்கு தஞ்சம்புக அனுமதி கேட்டிருந்தனர்.

மாலிக்கின் அமைச்சரவை இராஜினாமா செய்துவிட்டதால், வங்கதேசத்தின் முழுப் பொறுப்பும் இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் ஏ. ஏ. கே. நியாசி என்பவர்மீது விழுந்திருக்கிறது.

ஆனால் இவரோ, நேற்று யாகியா கானின் விருப்பத்துக்கேற்ப, 'கடைசி வீரன் இருக்கும்வரை போர் புரிவது' என்று தீர்மானித்திருக்கிறாராம்.

உயர்தர அதிகாரிகள், நடுநிலைப் பகுதியில் தஞ்சம் கேட்டிருப்பது, கவர்னர் மாலிக்கின் உத்தரவுப்படியேதான் என்றும் கூறப்படுகிறது.

விமானங்களின் தாக்குதலால் கவர்னரின் மாளிகை எரிந்துகொண்டிருப்பதாகவும், கவர்னர் அங்கேயே இருந்துவருவதாகவும் மற்றொரு தகவல் கூறுகிறது.

டாக்காவில் வங்காளிகளாக உள்ள போலீசாரின் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகிறது; 'இவர்கள் புரட்சி செய்வார்களோ' என அஞ்சியே இந்நடவடிக்கையாம்.

நடுநிலைப் பகுதியில் தஞ்சம் புகுவோர் கவனமாகச் சோதனை செய்யப்படுகின்றனர்; இந்தப் பணி, செஞ்சிலுவை ஊழியர்கள் -- மற்றும் பத்திரிகை நிருபர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஓட்டலுக்கு ஆயுதங்கள் எதுவும் கொண்டுவரக்கூடாது என்று கண்டிப்பாக நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, சோதனை செய்யப்படுகிறது; சிலரிடமிருந்து மூன்று கைத் துப்பாக்கிகளும் -- குண்டுகளும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

டாக்காவில் நமது படை நுழைந்தது

புதுடில்லி, டிச. 15—

இந்திய இராணுவ வீரர்கள் டாக்கா நகரின் வெளிப் பாதுகாப்பு அரணை உடைத்துக்கொண்டு நகருக்குள் புகுந்துவிட்டனர்; நகர மத்தியில் வந்து சேர இன்னும் 6-மைல்கள்தான் உள்ளதாம்.

புற அரணில் நடைபெற்ற சிறிய ஒரு போரில் பாகிஸ்தான் 33-வது படையின் தளபதி பிரிகேடியர் காதிர் கான் தமது 9 உயர்தர அதிகாரிகளுடன் சரணடைந்துவிட்டார்; லெப்டினென்ட் ஜெனரல்கள் -- மேஜர்கள் போன்ற அதிகாரிகள் இதில் உள்ளனர்.

மைமன்சிங் பகுதியிலிருந்து மற்றொரு இந்தியப் படைப் பிரிவு டாக்காவை நோக்கி வந்துகொண்டிருக்கிறது; இவர்கள் இன்னும் டாக்காவை அடைய 12-மைல்கள்தான் உள்ளன.

தெற்குப் பகுதியிலிருந்தும் நமது படையினர் பாகிஸ்தான் துருப்புக்களை நெருக்கி, இந்தியப் படைகளுக்கு உதவியாக வந்துகொண்டிருக்கின்றனர்.

இந்தியத் துருப்புக்களின் வெளித் தாக்குதலும், உள்ளே விடுதலைப் படையின் தாக்குதலும் சேர்ந்து டாக்காவில் வீழ்ச்சியை மணிக்கணக்காகக் குறைந்திருக்கிறது.

டாக்காவில் இன்னும் 15,000 அல்லது 20,000 பாகிஸ்தான் துருப்புக்கள்தான் இருப்பதாகக் கருதப்படுகிறது; கூடியவரையில் இவர்கள் உயிரிழக்கக்கூடாது என்றே இந்திய இராணுவம் விரும்புகிறது; இதற்காக, 'ஆத்தமின்றி உயிரிழக்க வேண்டாம்' என்றும் உடனே சரணடையுமாறும் கேட்டுக்கொண்டு இந்தியத் தளபதி மானெக் ஷா விடுத்த வேண்டுகோள், இலட்சக்கணக்கில அச்சடிக்கப்பட்டு, நகரெங்கும் விமானம் மூலம் போடப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி நியாசி, கடைசிவரை போரிடுமாறு உத்தரவிட்டிருப்பதும் -- மக்கள் வசிக்கும் இடங்களையும் இராணுவக் காரியங்களுக்காகப் பயன்படுத்திவருவதும் -- இந்திய அதிகாரிகளுக்கு மிகச் சங்கடத்தை உண்டாக்கியிருக்கிறது; டாக்கா பல்கலைக் கழகம் முழுவதும் இராணுவத்தினரின் ஆதிக்கத்தில் இருக்கிறதாம்.

சென்னையில்

செயல் வீரர்கள் கூட்டம்

பகுதிவாரியாக நடைபெறும் நாட்கள்

சென்னை, டிச. 15—

சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் எம்.எல்.சி அவர்கள் அறிவிப்பதாவது:—

மாவட்டத் தி. மு. கழகத்தின் தீர்மானப்படி சென்னையில் பகுதி வாரியான செயல் வீரர்கள் கூட்டம் கீழ்வரும் நாட்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது:—

16—12—71 இரவு 8-மணி: வண்ணை பகுதி:—இடம்: 'அறிவகம்', இராயபுரம்.

17—12—71 இரவு 8-மணி: துறைமுகம் பகுதி:— இடம்: 27, நாட்டுப்பிள்ளையார்கோயில் தெரு, மணி நர்சரிப் பள்ளி.

18—12—71 இரவு 8-மணி: பேசின்பிரிட்ஜ் பகுதி:—இடம்: 39, திருவொற்றியூர் நெடுஞ்சாலை.

19—12—71 இரவு 8-மணி: பூங்கா நகர்ப் பகுதி.

20—12—71 இரவு 8-மணி: புரசைப் பகுதி:—இடம்: 95-ஏ, இராகவாச்சாரி தெரு, பொம்மைக் கல்யாண மண்டபம், 53-வது வட்டம்.

21—12—71 இரவு 8-மணி: எழும்பூர்ப் பகுதி:—இடம்: 27/28, எழும்பூர் நெடுஞ்சாலை, 68-வது வட்டம்.

22—12—71 இரவு 8-மணி: ஆயிரம்விளக்குப் பகுதி:—இடம்: 16, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, 77-வது வட்டம்.

23—12—71 இரவு 8-மணி: திருவல்லிக்கேணிப் பகுதி:— இடம்: அண்ணா சாலை, தி. மு. க. அலுவலகம்.

24—12—71 இரவு 8-மணி: மயிலைப் பகுதி.

25—12—71 இரவு 8-மணி: தியாகராயநகர்ப் பகுதி.

26—12—71 காலை 9-மணி: சைதைப் பகுதி.

26—12—71 இரவு 8-மணி: பெரம்பூர்ப் பகுதி.

செயல்வீரர் கூட்டத்தில் பகுதிச் செயலாளரின் கையொப்பமிட்ட அழைப்புச் சீட்டுப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே அனுமதிக்கப் பெறுவர்.

மாவட்ட -- பகுதிப் பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள், துணை மன்ற நிர்வாகிகள், பகுதியிலுள்ள நாடாளுமன்ற -- சட்டமன்ற -- மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்-ஆகியோருக்கு உரிய அடையாளச் சீட்டுகளை அனுப்பி, செயல்வீரர்கள் கூட்டம் சிறப்படையச் செய்யுமாறு எல்லாப் பகுதிச் செயலாளர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பு:—இடம் அறிவிக்கப்படாத பகுதிகளின் கூட்டம் நடைபெறும் இடத்தை அந்தந்தப் பகுதிச் செயலாளரே அறிவிப்பார்.

வண்ணை பகுதி தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்

"வண்ணைப் பகுதி தி மு.க. செயல் வீரர்கள் கூட்டம் 16—12—71 இரவு 8-மணிக்கு இராயபுரம் 'அறிவகத்தில் நடைபெறும்; பகுதி-கிளைக் கழக-துணைமன்ற நிர்வாகிகள், மாவட்ட-பகுதிப் பிரதிநிதிகள், கிளையின் செயற்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர், மாநகராட்சி உறுப்பினர்கள் ஆகியோர் அந்தந்த வட்டச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட அடையாள அழைப்புச் சீட்டுடன் வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று பகுதிச் செயலாளர் பி. ஏ. என்.இராஜரத்தினம் அறிவிக்கிறார்.

அமெரிக்காவின்பூச்சாண்டிக்கு யாரும் அஞ்சப் போவதில்லை

அணுசக்திக் கப்பலுக்கு ஜப்பானில் நேர்ந்த அவமதிப்பு தெரியாதா?

புதுடில்லி, டிச. 15—

அமெரிக்காவின் ஏழாவது கடற்படையின் போர்க் கப்பல்கள், வங்காளக் கடலுக்கு அல்லாமல அராபியக் கடலுக்கும் செல்லக்கூடும் எனப் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

அணுசக்தியால் இயங்கும் 'எண்டர்பிரைஸ்' என்ற அந்த விமானந் தாங்கிக் கப்பல், ஜப்பானிய மக்களால் மிகவும் வெறுக்கப்பட்ட போர்க் கப்பலாகும்.

1968-ல் தென் ஜப்பானிலுள்ள அமெரிக்கக் கடற்படைத் தளத்துக்கு அக்கப்பல் வருவதற்கு ஜப்பானியத் தலைமையமைச்சர் அனுமதி தந்தபோது, ஜப்பான் முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று -- மாணவர்களும் மற்றவர்களும் பெரும் அளவில் காயமுற்றனர்.

வங்காள தேசத்தை விடுவித்த பிறகு மேற்குப் பாகிஸ்தான் பகுதியில் வெற்றி பெறுமல் இருக்கும் அளவில இந்தியாவை நிர்ப்பந்திப்பதற்காகவே அந்தக் கடற்படைக் கப்பல்களை இந்தியாவின மேற்குக் கரைக்கு அனுப்புவதாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

இந்தியாவின் உறுதியை அலைக்கழித்துப் பாகிஸ்தானுக்குத் தெம்பூட்டுவதற்காகத்தான் அந்தக் கடற்படையை அமெரிக்கா நகரச் செய்திருக்கிறது என்பதற்கு ஐயம் ஏதுமில்லை; இதுபோன்ற செயல, நாகரிகத்திற்கு உரியதுதானா என்பதை -- அமெரிக்கா இன்று யோசிக்காவிட்டாலும் -- விளைவை அனுபவிக்கும்போதுதான் அது உணரக்கூடுமோ என்னவோ?

62,50 கோடி அளவில் உள்ள இரு பகுதி மக்களின் பகையைத் தேடிக்கொண்டு -- சுமார் 5 கோடி மக்கள் மட்டுமே உள்ள பாகிஸ்தான இராணுவ ஆட்சியின சர்வாதிகாரத்திற்கு நிக்சன அரசாங்கம ஆதரவு தருவது ஏன -- உலக நாடுகளின மக்கள பலரும் கேட்கத்தான செய்வர்.

இந்நிலையிலும், இந்தியா -- பாகிஸ்தான் போரில் நேரடியாகத் தலையிட அமெரிக்காவோ அல்லது சீனாவோ முற்படக்கூடும என்று இந்தியத் தலைநகரில் எவரும கருதவில்லை.

"வங்காள தேசத்தை இனியும மேற்குப் பாகிஸ்தான் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது முயலாத ஒன்றாகும்" என்ற கருத்துக்கு அமெரிக்காவும -- சீனாவுமகூட வந்துவிட்டதாக அந்நிய இராசதந்திரிகள் கருதுகின்றனர்.

மேற்கு அரங்கிலும் வெற்றிமேல் வெற்றி

ஜலந்தர், டிச. 15—

மேற்கில் சியாலகோட் பகுதியில் நமது படைக்கு நேற்று பெரும் வெற்றி கிட்டியுள்ளது.

காக்ஸ் பஜார் என்னும் இடத்தில் 900 சதுர மைல் பரப்பளவுள்ள பாகிஸ்தான் பகுதியை நமது படைகள் கைப்பற்றியிருக்கின்றன.

'படை பலத்தைக் காட்டும் தேவையற்ற செயல்'--ஐ.நா. இந்தியத் தூதர் கண்டனம்

நியூயார்க், டிச. 15—

"வங்காள தேசத்திலிருந்து அமெரிக்கர்களும -- மற்ற வெளிநாட்டினரும் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு இந்தியா முழு ஒத்துழைப்பை அளிக்கும்; அவர்களை வெளியேற்ற அயல்நாட்டினர் எந்த நடவடிக்கை மேற்கொண்டாலும் சம்பந்தப்பட்டவர்களைக் கலக்காமல் எந்த முயற்சியிலும் ஈடுபடக்கூடாது' என்று ஐ.நா.விலுள்ள இந்தியப் பிரதிநிதி எல். கே. ஜா கூறினார்.

"அமெரிக்கர்களை வெளியேற்றுவதற்கென்று அமெரிக்க 7-வது கடற்படை அணிக் கப்பல் வருவது, படை பலத்தைக் காட்டும் ஒரு தேவையற்ற செயலாகும்" என்றும் அவர் கூறினார்.

பாரசூட் படைகள் பிடிபட்டன

ஜம்மு, டிச. 15—

பூஞ்ச் பகுதியில பாகிஸ்தானால் இறக்கப்பட்ட 19 பாரசூட் துருப்புக்களை இந்தியப் பாதுகாப்புப் படை பிடித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.